Share Report Abuse Next Blog» Create Blog Sign In

# தமிழ் செய்திகள்

**hi**

Sunday, 17 May 2009

## மக்களை மீட்கும் மனிதாபிமான நடவடிக்கை பூர்த்தி! புலிகளை தேடி அழிக்கும் நடவடிக்கையில் இராணுவத்தினர்!

புலிகளின் பிடியில் சிக்கியிருந்த சகல பொது மக்களையும் பாதுகாப்புப் படையினர் மீட்டெடுத்து விட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.
இதற்கமைய பொது மக்களை மீட்டெடுக்கும் நடவடிக்கையை இராணுவத்தினர் வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.மீட்பு நடவடிக்கை முடிவடைந்ததை அடுத்து பாதுகாப்பு வலயத்தின் இறுதி பிரதேசத்திற்குள் பிரவேசித்துள்ள படைவீரர்கள் அங்கு முடக்கப்பட்டுள்ள புலிகளை முற்றாக தேடி அழிக்கும் இறுதிக் கட்ட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக பிரிகேடியர் சுட்டிக்காட்டினார்.
பொதுமக்களை முற்றாக மீட்டெடுக்கும் இறுதிக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்த இராணுவத்தினர் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் 72 மணி நேரத்திற்குள் 62 ஆயிரத்திற்கும் அதிகமான பொது மக்களை மீட்டெடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.
பொது மக்களை மீட்கும் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கென இராணுவத்தின் 53, 58, 59வது ஆகிய மூன்று படைப் பிரிவுகள் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. தற்பொழுது மொத்தமாக 2 இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் அதிகமான பொது மக்களை படையினர் மீட்டெடுத்துள்ளனர்.
இறுதிக் கட்ட மீட்பு நடவடிக்கையின் போது நேற்று முன்தினம் மாத்திரம் 36,985 பொது மக்களை படையினர் மீட்டெடுத்துள்ளனர். இவர்களில் 59வது படைப்பிரிவினர் 30 ஆயிரம் பேரையும், 53வது படைப் பிரிவினர் 4328 பேரையும், 58வது படைப் பிரிவினர்2657 பொது மக்களையும் மீட்டெடுத்திருந்தனர்.
இதேவேளை, நேற்றைய இறுதிக்கட்ட மீட்பு நடவடிக்கை பூர்த்திசெய்வதற்கு முன்னர் 12,953 பொது மக்களை மீட்டெடுத்துள்ளனர். இவர்களில் 59வது படைப்பிரிவினர் 11 ஆயிரம் மக்களையும், 53வது படைப்பிரிவினர் 1892 பேரையும், 58வது படைப் பிரிவினர் 61 பொது மக்களையும் மீட்டெடுத்துள்ளதாகவும் பிரிகேடியர் குறிப்பிட்டார்.